# இரண்டு நண்பர்கள்




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com

# இரண்டு நண்பர்கள்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# இரண்டு நண்பர்கள்





ராமுவும் சோமுவும் நெருங்கிய நண்பர்கள். ஒரு நாள் இருவரும் காட்டின் வழியாகச் சென்று கொண்டிருந்த பொழுது புலியின் உறுமல் சத்தம் கேட்டது. இருவரும் அங்கும் இங்கும் ஓடினர். புலி மிகவும் அருகில் வந்தது. சோமு வேகமாக மரத்தில் ஏறினான். ஆனால் ராமுவிற்கு மரம் ஏறத் தெரியாது தன்னையும் காப்பாற்றும் படி சோமுவிடம் கேட்டான்.



தன்னால் முடியாது என்று கூற, ராமுவிற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. உடனே இறந்த உடலை விலங்குகள் உண்ணாது என்பது நினைவிற்கு வந்தது. அவன் தரையில் படுத்துக் கொண்டு இறந்தது போல் நடிக்க ஆரம்பித்தான். சிறிது நேரம் அவன் மூச்சை வெளியில் விடாமல் அடக்கிக் கொண்டான்.



புலியும் அருகில் வந்து நுகர்ந்து பார்த்து அவன் இறந்து விட்டதாக எண்ணி சென்று விட்டது. புலி சென்ற பிறகு சோமு மரத்தை விட்டு கீழே இறங்கினான். சோமு ராமுவைப் பார்த்து “புலி உன் காதில் என்ன சொன்னது?” என்று கேட்டான். அதற்கு ராமு "ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன்” என்றது என்றான்.



## கதையின் நீதி

ஆபத்தில் இருக்கும் போது நாம் மற்றவருக்கு உதவ வேண்டும்.




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com